# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.259/2023

Deposition of witness for Prosecution – PW-4

| | | | |
|---|---|---|---|
| Name | : நாகராஜ் | Caste | : |
| S/o. | : சேட்டு | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 31.10.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் வாழப்பாடி தாலுகா அயோத்தியாபட்டிணத்தில் குடியிருக்கிறேன். நான் ஓட்டோ ஓட்டி வருகிறேன். வழக்கில் இறந்துபோன மணி எனக்கு மாமனார் ஆவார்.

08.01.2023ம் தேதி எனது மாமியார் எனக்கு போன் செய்து, எனது மாமனாரை யாரோ கொலை செய்துவிட்டதாக கூறி தாரமங்கலம் வருமாறு கூறினார். என்னை கருக்கப்பட்டி பக்கத்தில் உள்ள குமார் என்பவரின் கிணற்றுக்கு வருமாறு கூறினார். நான் மாலை 6.30

மணிக்கு சென்று பார்த்தேன். அப்போது அங்கு போலிசார் இருந்தார்கள். தீயணைப்பு துறையினர் வந்து கிணற்றிலிருந்து என் மாமனாரின் வெட்டப்பட்ட உடல் பாகங்களை வெளியே எடுத்தார்கள். என் மாமனாரின் கை இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டிருந்தது, கால்களும் இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டிருந்தது, உடலும் இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டிருந்தது, கழுத்தில் வெட்டப்பட்டிருந்தது. எனது மாமியாரிடம் விசாரித்தபோது செல்லானும் எனது மாமனாரும் இருவரும் நண்பர்கள் என்றும், செல்லான் ரூ.200 பணம் கொடுத்து என் மாமனாரிம் போன் வாங்கி தருமாறு கேட்டுள்ளார், ஆனால் என் மாமனார் போன் வாங்கி தரவில்லை. அதனால் இருவருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. அந்த முன்விரோதம் காரணமாக செல்லான் என் மாமனாரை கொலை செய்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.